செ.வெ.எண்.169 நாள்.13.03.2018.

# நபார்டு வங்கியின் திட்ட அறிக்கை வெளியீடு. திருநெல்வேலி மாவட்டத்தின் 2018-19ஆம் ஆண்டிற்கான வளம் சார்ந்த கடன் திட்ட மதிப்பீடு ரூ.8645.22 கோடி.

**திருநெல்வேலி மாவட்டத்தின் அடுத்த ஆண்டு** 2018-19 **ரூ.**8645.22 **கோடி முன்னுரிமை வங்கி கடன்களாக வழங்க வாய்ப்புகள் உள்ளதாக** தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்க**யின்** (NABARD) **வளம் சார் கடன் திட்ட அறிக்கை** ( potential linked credit plan)**தெரிவிக்கிறது**. **இதனை இன்று** (13.03.2018) **மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்** மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப, அவர்கள் வெளியிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

நமது மாவட்டத்திற்கு 2018-19 ல் முன்னுரிமை கடனாக ரூ. 8645.22 கோடி கொடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது. 2018-19 ஆண்டில் பயிர் கடன்களுக்கு ரூ. 4287 கோடியும், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மற்ற தொழில்களுக்கு முதலீட்டு கடனாக ரூ. 1643 கோடியும், குரு மற்றும் சிறு தொழில்களுக்கு ரூ.558 கோடியும், இதர முன்னுரிமை கடன்களுக்கு ரூ. 2157 கோடியும் தர வாய்ப்புகள் இருப்பதாக அது தெரிவிக்கிறது. இந்த **ஆய்வு**திட்ட அறிக்கை மாவட்டத்தின் வளமை முன்னிறுத்தி தயாரிக்கப்படுகிறது. அவர் வங்கிகள் விவசாயத்திற்கும் அதை சார்ந்த நடவடிக்கைகளுக்கும் சாத்தியம் உள்ள அளவிற்கு கடன் கொடுக்க வேண்டும் என கூறினார். **திட்ட மதிப்பிட்டில் கூறப்பட்டுள்ளபடி கல்வி மற்றும் சுய உதவி கடன்கள் அதிகமாக வழங்க வேண்டும் என்று வங்கியாளர்களை கேட்டுக்கொண்டார்**.

திட்டத்தை பற்றி விளக்கிய நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் எஃப் சலீமா,அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தின் தற்போதுள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள் விரிவாக்க சேவை மையங்களின் செயல்பாடு, தெரியவரும் தொழில்நுட்ப மாற்றம், வங்கிகளின் நிதி ஆதாரம் ஆகியவற்றை ஆதாரமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டு நபார்டு வங்கி வளம் சார் கடன் திட்ட அறிக்கையை வெளியிடுகிறது. அந்த வகையில் 2018-19 கான வளம் சார் கடன் திட்டம் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மற்ற தொழில்களில் முதலீட்டை அதிகபடுத்த வேண்டும் மற்றும் நபார்டு வங்கி**யின்** கடன் திட்ட **மதிப்பீட்டின் அடிப்படையில்** முன்னுரிமை கடன்கள் வழங்க **வங்கிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு கொண்டார்**

திட்டத்தின் முதல் பிரதியை IOB பிராந்திய மேலாளர் திரு E ராஜ்குமார் பெற்று கொண்டார். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், **திரு** N **கஜதேரநாதன் அவர்கள்** நபார்டு வங்கி**யின்** வளம் சார் கடன் திட்ட அறிக்கை**யின் அடிப்படையில் அடுத்த ஆண்டின் வருண்டாந்திர கடன் திட்டம் தயாரிக்கப்படும் என்று தெரிவித்தார்**.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி